# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233


கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ பங்குனி 1986 ★ இதழ் 123


# விற்பனையும் சேவையும்

வர்த்தகத்துறை, கைத் தொழில் துறை, வியாபாரத் துறை முதலிய பொருளீட்டும் துறைகளில் விற்பனையோடு சேவையும் கைகோத்துச் செல்வதை ஈட்டலும் இசைபட வாழ்தலும் எனப்போற்றுவர். விற்பனையும் சேவையும் கைகோத்து உலாவும்போது செல்வாக்கு தானே வரும். கொடுத்தார் என்னும் சொல் பலகாத தூரம் கேட்கும். செல்வாக்கைத் தொடர்ந்து செல்வம், மேலும் வந்து குவியும். செல்வத்துக்கழகு செழுங்கிளை தாங்குதல். செழுங்கிளை தாங்குவோன் ஊர்மக்களுக்கும் உரியவனாகிறான். அவனுடைய செல்வம் ஊர்ப்பொதுக் கிணறு போலாகிறது. "ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு."

விற்பனையும் சேவையும் கைகோத்தாற் போல, ஈட்டுதலும் ஈதலும் கைகோத்துலாவுதல் நெறி. ஈட்டுபவர் ஈயாவிட்டால் பொருட்பற்று மிகுதியால் உடைமைப் பற்றுக்காளாக வேண்டிவரும். உடைமைப் பற்றுக்காளானவரை உற்றாரும் உறவினரும் வேண்டார்கள். அவனும், உடாதும் உண்ணாதும் தன்னுடம்பு வாடக்கெடாத நல்லறமும் செய்யாமல், ஈட்டுதல்

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)



விதுஷி வசந்தா வைத்தியநாதன் அவர்களின் ஆதீனப் பணியைப் பாராட்டி, திருவாட்டி மில்க்வைற் நாகம்மா கனகராசா ஆடைபோர்த்தல்

ஆசைகளை அகற்றுபவன் அமைதியை அடைகிறான்

உ
சிவமயம்






சுந்தரமூர்த்திநாயனர் தேவாரம்

திருநெல்வாயிலரத்துறை

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

திண்டேர்நெடு வீதி இலங்கையர் கோன்
திரள்தோள் இரு பஃதும்நெ ரித்தருளி
ஞெண்டாடுநெ டுவ்வயல் சூழ்புறவின்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
பண்டே மிக நான்செய்த பாக்கியத்தாற்
பரஞ்சோதி நின்நாமம் பயிலப்பெற்றேன்
அண்டா அமரர்க் கமரர் பெருமான்
அடியேன்உய்யப் போவதோர் சூழல்சொல்லே.

திருச்சிற்றம்பலம்

நீண்ட தெருக்களையுடைய இலங்கையருக்கு அரசனை இராவணனுடைய திண்ணிய திரண்ட இருபது தோள்களையும் நெரித்து, அவனுக்குப் பேரருளும் புரிந்தருளி; நண்டுகள் உலாவி விளையாடுகின்ற நீண்ட வயல்கள் சூழ்ந்த முல்லை நிலத்தையுடைய திருநெல்வாயிலரத்துறை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற மாசற்றவரே, மேலான ஒளிவடிவினரே, தேவாதிதேவரே, அடியேன் முன்னர் செய்த நல்வினைப் பயனால் தேவரீரின் திருநாமமாய திருவைந்தெழுத்தைப் பயிலப்பெற்றேன். இனி அடியேன் உலகியலினின்றும் பிழைத்துப்போவதற்குரிய வழியினை, அடியேன் முன்னர் திருவைந்தெழுத்தை ஓதியதன் பயனாக அளித்தருள வேண்டுகின்றேன். சொல்லியருளுக.




### செங்கோன்மை

நடுநிலையாக ஆளும் அரசாட்சியின் தன்மை.

**"எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்".**

நீதி வேண்டிவந்து குறையிரப்பவர்களுக்கு எளிய செவ்வியுடையவனாய் ஆராய்ந்து நீதிமுறை செய்யாத ஆட்சியாளன், தாழ்ந்த நிலையிலே நின்று தானே கெடுவான்.

### Just Government

The ruler who fails to do justice by easy accessibility and careful inquiry falls into decline and perishes himself.

## 1986 மார்ச்மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 2. | ஞாயிறு | — | சரோஜினி நாயுடு தினம் |
| 3. | திங்கள் | — | பகல் 8-48 அட்டமி |
| 4. | செவ்வாய் | — | இரவு 4-12 வரை நவமி |
| 6. | வியாழன் | — | ஏகாதசி விரதம் |
| 7. | வெள்ளி | — | வண்ணை வைத்தீஸ்வரர் கொடி. |
| 8. | சனி | — | சனிப்பிரதோஷ விரதம்<br>மகா சிவராத்திரி<br>கீரிமலை நகுலேஸ்வரர் தேர் |
| 10. | திங்கள் | — | அமாவாசை விரதம்<br>வல்வெட்டித்துறை சிவன் கொடி |
| 14. | வெள்ளி | — | தமிழ்ப்பங்குனி மாதப்பிறப்பு<br>சைவப்பெரியார்<br>சிவபாதசுந்தரம் தினம் |
| 16. | ஞாயிறு | — | கார்த்திகை விரதம்<br>கொழும்பு பொன்னம்<br>பலவாணேசுரர் கொடி |
| 18. | செவ்வாய் | — | பகல் 7-33 மேல் அட்டமி |
| 19. | புதன் | — | நவமி |
| 20. | வியாழன் | — | நவமி பகல் 10-48 வரை |
| 22. | சனி | — | ஏகாதசி விரதம்<br>யோகசுவாமிகள் குருபூசை |
| 23. | ஞாயிறு | — | பிரதோஷ விரதம்<br>இந்திய விடுதலை வீரர்<br>சத்தியமூர்த்தி தினம் |

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

★ பக்திமனம் படைத்தவன் அதிகார மிரட்டலுக்கு அஞ்சான் ★



## ரோல்ஸ் ரோய் சொன்ன கதை

### நாட்டுப்புறத்தானும் வெள்ளரித் தோட்டமும்

நாட்டுப்புறத்தான் ஒருவன் ஒருநாள் ஒரு மரக்கறித் தோட்டத்தைக் கண்டான். அங்கே வெள்ளரிக்காய்கள் அதிகமாக இருந்தன. அவன் அவற்றில் சிலவற்றைத் திருடுவதற்கு விரும்பினான். அப்படி நினைத்தவாறே அவன் தனக்குள் சொன்னான். "இன்று ஒரு சாக்குநிறைய வெள்ளரிக்காய் பிடுங்கிக் கொண்டுபோய், சந்தையில் விற்பேன். கிடைக்கிற பணத்தைக்கொண்டு ஒரு கோழி வாங்குவேன். கோழி முட்டைகள் இட்டுக் குஞ்சுகள் பொரிக்கும். குஞ்சுகள் வளர்ந்ததும் அவற்றை விற்று ஒரு பன்றி வாங்குவேன். பன்றி பல குட்டிகள் ஈனும். பன்றிக் குட்டிகள் வளர்ந்ததும் அவற்றை விற்று ஒரு பெட்டைக் குதிரை வாங்குவேன். பெட்டைக் குதிரை குட்டியீனும். குதிரைக் குட்டிகளை நல்ல விலைக்கு விற்று ஒரு வீடும் தோட்டமும் வாங்குவேன். தோட்டத்தில் வெள்ளரி நடுவேன். தோட்டத்தைக் காவல்புரிய நல்ல காவலாளியை நியமனம் செய்வேன். இடையிடையே தோட்டத்திற்குச் சென்று "ஏஏ வெள்ளரிக்காய்கள் கவனம் என்று எச்சரிப்பேன்" என்று கூறி உரத்த குரலில் "ஏ ஏ வெள்ளரிக்காய்கள் கவனம்" என்று கத்தினான். அந்தக் குரலைக் கேட்டுத் தோட்டக்காரன் ஓடிவந்து அவனைப் பிடித்து நன்றாக அடித்தான்.

## பொதுவுடைமை கண்ட மாக்ஸ்

இயன்றிச் காள் மாக்ஸ் ஜேமன்நாட்டைச் சேர்ந்த யூதர். தத்துவத்துறையில் முறுக்கேறிய ஹீகல் என்பாரின் மாணாக்கன். தத்துவத் துறையை விட்டுச் சமுதாய பொருளாதாரத் துறையில் புகுந்து, சனரஞ்சகமான முறையில் ஆராய்ந்தவர். அவரின் கோட்பாடு காரணமாக நாடுகடத்தப்பட்டு பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய நாடுகளைக் கண்டு, இங்கிலாந்தில் நிரந்தரமாக வாழ்ந்து சர்வதேசாபிமானம் கண்டவர். மூலதனம் என்னும் பொருள்பற்றிய பொருளாதார நூல் எழுதிப் பொதுவுடைமைக்கு வித்திட்டவர். அவர் சென்ற நூற்றாண்டில் ஆறுமுக நாவலர் அவர்களுக்கு நான்கு ஆண்டுகள் முன் பிறந்து, நாவலர் மறைந்து நான்காண்டுகளின் பின் மறைந்தவர். அஃதாவது 1818—1883.

## அறிந்துகொள்ளுங்கள்


1 காமமும் குரோதமும் ஞானத்தை மாசுபடுத்துவன.
2 தூசும் புழுதியும் கண்ணாடியை மறைப்பன.
3 பாவம் புண்ணியம் மாத்திரம் எம்மோடு வருவன.
4 புண்ணியம் மாத்திரம் நற்கதி தருவதால் அதனையே செய்வோம்.
5 உறுதியுள்ள மனிதனைக் கவலைகள் தாக்குவதில்லை.
6 வியாழன் சூரியனைச் சுற்றிவரப் பன்னிரண்டு ஆண்டுகளாகும்.
7 பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மகம் சிறப்படையும்.
8 நல்லவனைப் பாராட்டத் தயங்குதல் ஆகாது.
9 பணச் செலவு இல்லாமல் பெறக்கூடியது பண்பாடு
10 பகைவர் நண்பர் இல்லாதவர் நொதுமலர்.
11 கூட்டுச் சேராக் கொள்கையினரும் நொதுமலராவர்.
12 பெரியவர்கள் மனங்குளிர நடந்தால் நல்லாசி பெறலாம்.
13 அடக்கம் அன்பு பணிவு எல்லாவற்றிலும் மேலானவை.
14 சக்தியின் மூலமாகவே சிவம் ஆனந்த நடனம் ஆடுகிறது.
15 அன்பில்லாத ஒருவரை வெறும் பிணம் எனக் கருதலாம்.
16 பருவகாலம் வராமல் மரம் பழம் தரமாட்டாது.
17 செருக்கு கோபம் கீழ்மைத்தனம் மனிதரைக் கெடுப்பன.
18 எதிலுமே அளவு கடந்த மகிழ்ச்சி கொள்ளலாகாது.
19 வாழ்வில் உயர்வடைதற்கு மனவுறுதி மிகவும் அவசியம்.
20 புருடார்த்தங்கள் நான்கினுள் தருமமும் மோட்சமும் சிறந்தவை.
21 பழைய வைத்தியர்கள் சோதிடமும் படித்திருந்தார்கள்.
22 நவக்கிரகங்கள் நம்மை ஆளும் ஆள்பதிகளாவர்
23 ஏழுவர்ணங்களின் ஒளி வீசும் மணி வைரம் ஒன்றுதான்
24 நவரத்தினங்களுக்கு நோய் நீக்கும் குணமும் உண்டு.
25 அறிவு, சிந்தனை வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் புத்தகங்கள் உதவுவன.

## படிக்கும் பழக்கமும் புத்தகப் பெருக்கமும்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் கணித்தவண்ணம் இந்தியாவில் தமிழ்நாட்டிலேதான் பத்திரிகைகள், புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் அதிகமாயிருப்பதோடு வெளியீடுகளும் அதிகமாக இருக்கிறதென்று கண்டனர். தமிழா உன் தரமான படிப்பாற்றலைக் காட்டிவிட்டாய் உனக்கு எம் பாராட்டு.

தென்மொழிகளில் நூல்கள் வெளியிடும் தாபனம் இரண்டு ஆண்டுகளில் நூறு புத்தகங்கள் வெளியிட்டமை தென்திசையுயர்வுக்கு எடுத்துக்காட்டு.

★ ஆர்வம் இல்லாமல் எதுவும் ஆகாது ★




## உள்ளார்ந்த அமைதி

வெளியிலே பெரும்புயல் வீசியபோதிலும் உள்ளே சாந்தி இருக்குமாயின் வெளிப்புயல், சூறுவளி எம்மை ஒன்றும் செய்யமாட்டா. உண்மையை உணர்ந்து ஊறிய உள்ளம் உடையவரை வெளிக்குமுறல்கள் பாதிக்க மாட்டா. சுற்றுடலில் சமூகத்தில், ஏதாவது வகையில் எதிர்ப்புகள் தோன்றினுலும் சாந்தமனமுள்ளவர் தாக்கப் படுவதில்லை. பதிலாக உள்ளார்ந்த அமைதி ஆழமாகப் பதிந்துகொள்ளுவதும் உண்டு. அன்றிப் பிறர் மனத்தை இழகச் செய்வதும் உண்டு. பிறர் குற்றங்களை மனத்தில் கொள்ளாதவர் உள்ளமே உள்ளம். அது வரப்பிரசாத மாயமைந்த உள்ளம். பிறர் குற்றங்களை மறந்து, அவர் களை மன்னித்துவிடுதல் உள்ளார்ந்த மனத்தின் ஒப்பற்ற பண்பு

# Learn your English

**Give one word for the group**

1. Good at speaking in public
2. To make something easy to understand
3. Escape by a trick
4. To preserve a dead body from decay
5. To put difficulties in way
6. To remove faults
7. A medicine that causes vomiting
8. To leave one's country to settle in another
9. A feeling that disturbs the mind
10. One who works for a master
11. One who pays people to do work
12. Having nothing in it
13. To give support to something
14. Power of doing work
15. To do by force
16. To write or draw on wood or steel
17. Great in size or amount
18. To make angry
19. Another name for typhoid fever
20. To give great delight.

1. eloquent 2. elucidate 3. elude 4. embalm 5. embarrass 6. emend 7. emetic 8. emigrate 9. emotion 10. employee 11. employer 12. empty 13. endorse 14. energy 15. enforce 16. engrave 17. enormous 18. enrage 19. enteric 20. enthral:

## மதுரையாதீனத்திற் கேட்டவை

மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிற் பிராகாரத்தில் அமைந்துள்ள திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் மடம் அவர் காலத்தது. ஆயிரத்து இருநூறுண்டுகளுக்கு மேலாகக் குருசிட பரம்பரையில் நிலவிவருகின்ற ஆதீனம் யாழ்ப்பாணத்து நல்லை ஆதீன முதல்வரை உருவாக்கித் தந்தது. அந்த ஆதீனத்து சைவப்பிரசார ஒலிபரப்பில் கேட்ட அருள்வாக்கு.

### I. பக்தி செய்தால்

1. பருவமழை பெய்யும்
2. பயிர்கள் செழிக்கும்
3. விளைபொருள்கள் பெருகும்
4. விலைவாசிகள் குறையும்
5. பசிப்பிணி நீங்கும்
6. பண்பாடு ஓங்கும்
7. சச்சரவு நீங்கும்
8. சமாதானம் ஓங்கும்
9. மனக்கவலை நீங்கும்
10. மனச்சாந்தி ஓங்கும்
11. பாவங்கள் போகும்
12. பரகதி சேரும்

### II. திருநீறு பூசினுல்

1. உடல்நாற்றம் போகும்
2. நோய்க்கிருமிகள் சாகும்
3. தீட்டுக்கள் கழியும்
4. உடம்பு சுத்தமாகும்
5. வியாதிகள் ஒழியும்
6. கெட்டவை நீங்கும்
7. முகத்துக்கு அழகு தரும்
8. ஞாபகசக்தி வளரும்
9. புத்தி கூர்மையாகும்
10. ஞானம் உண்டாகும்
11. பாவங்களைத் தீர்க்கும்
12. பரமனடியிற் சேர்க்கும்

## வழிகாட்டும் தமிழகம்

மரம்நாட்டும் பணியிலும், கரும்புச் செய்கையிலும் பல்வகைத் தானிய விளைவிலும் தமிழ்நாட்டு மக்கள் புதிய முறைகளைக் கையாண்டு பெருவெற்றி கண்டுள்ளார்கள். அவர்களுக்கு எங்கள் பாராட்டு. அவர்களைத் தலை சாய்த்து மதிக்கிருேம். வாழ்க அவர்கள் முயற்சி. தமிழக வேளாண்மை தலைசிறந்த வேளாண்மையாக மலர்க. வளம் பெருகுக.

★ இறைவனை எவ்வுருவிலும் சிந்திக்கலாம் ★

# கோவை மாவட்டம் பேரூர் கண்ட பெருவிழாக்கள்

தமிழகத்தில் கொங்குநாடு தனிப்பெருமை வாய்ந்த பிரதேசம். சங்ககாலப் புலவர் பெருமக்களுள் பொன் முடியார், கருவூர்ப்பூதன் சாத்தனார், பெருந்தலைச் சாத் தனார் முதலானோர் கொங்கு நாட்டைச் சேர்ந்தவர்கள். கொங்கு நாட்டின் சித்தர் பரம்பரையும் பெரிது. கருவூர்ச் சித்தர், கஞ்சமலைச் சித்தர், மருதமலைப் பாம்பாட்டிச் சித்தர், சென்னிமலைப் பிண்ணாக்குச் சித்தர், சிவமலைச் சிவ வாக்கியச் சித்தர், போகர், புலிப்பாணி முதலானோர் கொங்குநாட்டை உடையவர்கள். கொங்குநாட்டுச் சிற் றிலக்கியங்களின் வரிசையும் பெரிது. கோவைகள், சத கங்கள் கொங்குநாட்டின் உபகரிப்புகளில் அதிகமானவை. இன்றைய கொங்குநாடெங்கும் விவசாயமும் கைத்தொழி லும் கைகோத்து உழைப்பும் முயற்சியும் குதூகலிக்க நிலவுகின்றன. கொங்குநாட்டில் கோயில்களுக்கும் மடங் களுக்கும் குறைவேயில்லை. ஞானிகளும் வள்ளல்களும் நாட்டை வாழவைக்கிறார்கள். மக்கள் பண்பாட்டிற் சிறந்து விளங்குகிறார்கள், வள்ளல்களின் உபகரிப்பு உளம் பூரிக்கச் செய்யுந்தன்மையது. அவர்களின் உபகரிப்பு வள்ளல்களின் வரிசையில் வந்தது. குமணன், ஓரி, அதி கன் உபகரித்து வழிகாட்டிய பிரதேசம் இது.

கொங்குநாட்டில் தேவாரம் பாடப்பெற்ற திருக் கோயில்களும், திருப்புகழ் பாடப்பெற்ற திருக்கோயில் களும், வைப்புத் தலங்களும் கோட்டங் களும் உள்ளன. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடிய தலங்களும் இங்கே உண்டு. பழநிமலை, மருதமலை, குருந்தமலை, கதித்தமலை, சிவன்மலை, சென்னிமலை, கஞ்சமலை, செஞ்சேரிமலை, வெண்ணெய்மலை, தான்தோன்றிமலை முதலானவை ஒருபுறம். இன்னும் திருச்செங்கோடு, தாரமங்கலம் முதலியவற்றோடு மடமும் கோயிலும் அமைந்த பேரூர், கௌமாரமடம் அமைந்த சிரவை முதலியனவும் இங்கே உண்டு. பேரூர் என்பது திரு என்னும் அடைமொழி அமையப்பெற்றுத் திருப் பேரூர் என வழங்கும் இதை மேலைச்சிதம்பரம், ஆதிபுரி, பிறவாநெறி, அரசவனம் முதலிய திருநாமங்களாலும் வழங்குவர். தென்னாடுடைய சிவன் ஆடல்புரியும் அம் பலங்களால் வியாபகமுற்றவர். அவர் திருப்பேரூரில் கோமுனி என்பவருக்கும் பட்டிமுனி என்பவருக்கும் தனது நடனக்காட்சியைக் காட்டியருளியுள்ளார்.

இத்தகைய பெருமைவாய்ந்த திருத்தலத்திலே தவப்பெருந்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம் அமைத்து அடியவர்களுக்கு ஞானநெறி காட்டியருளியுள்ளார். அவரே உலகம் உய்யும்வண்ணம் கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், அவிரோதவுந்தியார், வைராக்கிய தீபம் ஆகிய குடங்களில் தமது ஞானவூற்றை நிரப்பித் தந்தருளியுள்ளார்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த பேரூரிலே சென்ற மாதம் பலவித விழாக்கள் பன்முகமாகப் பண்பாடு பரவும் வண்ணம் பசுமையாக நடைபெற்றன. அங்கே எழுந் துள்ள சாந்தலிங்கப்பெருமான் திருக்கோயிலில் கும்பாபி ஷேகமும், அங்கே எழுந்தருளியுள்ள ஆதீனப்பெரியவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் அறுப தாண்டு மணிவிழாவும், அங்கே ஒளிவீசும் சத்வித்தியா சன்மார்க்க சங்கத்தின் எழுபத்தைந்தாம் ஆண்டின் பவ ளம் பழுத்த விழாவும், இன்னும் பெரியவரின் திருவடிவழி பாடான குருபூசையும் பன்முகமாக நடைபெற்றன.

புதுப்பிக்கப்பெற்ற திருக்கோயிலின் வனப்பும், ஆதீன முன்றலில் அமைக்கப்பெற்ற திருக்கயிலை வளைவின் வனப்பும் கட்டப்பெற்றுள்ள மெய்ப்பொருளியல் ஆய்வுக்கூடத்தின் அமைவும், விழாக்களின் பண்பாட்டையும், பக்திசிரத்தை யையும் கோலாகலத்தையும் பொதுமக்களின் பங்களிப்பை யும் பரக்கக்காட்டியுள்ளன.

தமிழகத்தின் திருக்கைலாய பரம்பரை ஆதீனங்களும் பிறமடங்களும் தத்தம் திருக்கூட்டத்தார், பிரதியாளர், பக்தியாளர் முதலானவர்களை அனுப்பியிருந்தார்கள். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் அவற்றோடிணைந்த பெருங்கல்லூரிகளின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் வருகைபுரிந்து பட்டிமண்டபம் பாங்கறிந்தேறி எட்டினோ டிரண்டினை விளக்கிக் கருத்துரை வழங்கினார்கள். இசைத் துறை வல்லார் ஈண்டியிருந்து இசையின்பம் பெருக்கினர் ஒருபுறம். ஒருபுறம் விழாவுக்குரிய கொடியேற்றம் கோல மாக நடைபெற்றது. தொடர்ந்து வேள்விச்சடங்கு வேள்வி வழிபாடு, வீரசைவக் கருத்தரங்கு, இலிங்கதாரி களின் சிறப்புரைகள், துறவியர்தம் நீற்றழகில் நிறைவான கருத்துரைகள், தேவாரப் பண்ணிசைக்கும் இசையரங்கு, மங்கலவாத்திய முழக்கு, வில்லுப்பாட்டு முதலான ஒலி கள். இவற்றைத்தொடர்ந்து மணிவிழா மலர்வெளி யீடு, நூல்வெளியீடு, பத்துவிதக்கறியோடு அமுதளித் தல் யாவும் சைவப் பண்பாட்டினைப் பரக்கக்காட்டின. ஆதிகவியாய வான்மீகி காலத்திலேயே தமிழ்நாட்டின் மொழிவளம் பெருகிப் பாய்ந்தது. தமிழரின் உரை யாடலை வால்மீகியார் மனங்கொண்டு வாழ்த்தியுள் ளார். அதேசைவத் தமிழ் அன்றும் வாழ்ந்தது, இன் றும் வாழ்கின்றது. என்றும் வாழும். தமிழர் எங்கும் வாழ்வார்கள்.


---

## கலையரசிக்கு அஞ்சலி

சங்கீதம், சாகித்தியம், நடனம் ஆகியவை தமிழன் கண்ட ஆயகலைகள் அறுபத்து நான்கனுள் அடங்கியுள் ளன. நடனம் பரதம் முதலாகப் பலவகைப்படும், தென் னாட்டில் கலைகள் யாவும் அடைந்து ஆறுபோல் பிரவாகிக் கும் அடையாற்றுப் பிரதேசத்தில் கலைக்கோயில் அமைத்து நடத்திவந்த ருக்மணி அருண்டேல் அம்மையார் ஆயிரம் பிறை கண்டு அமரராயினார். அவர் பாரதநாட்டின் பண் பட்ட முதுமைக் கலைச்செல்வி. கலைஞரின் பிரதிநிதியாக ராஜ்ய சபையில் அங்கத்துவம் வகித்தவர். பாரதநாட் டின் பத்மபூஷணம் என்னும் பட்டம் பெற்றதோடு இசைத்துறையில் பல விருதுகளும் பெற்றவர். தேவி அவர் களின் சீடபரம்பரையினர் அவர் ஏற்றிய ஒளியை மேலும் சுடர்விடப் பணிபுரிவார்களாக.

---

★ இறைவனை எம்மொழியிலும் ஏத்தலாம் ★



## பசுவின் குரல்

புலால் உண்பவரைப் புலையர் என்பர். பசுவைக் கொல்பவர் கொடிய புலையர். உலகில் உள்ள உயிரினங்கள் கழிப்பன யாவும் மலம். மலத்தை லொத்தி, பீ என்றெல்லாம் சொல்லி அருவருப்புக் காட்டுவர். பசுவின் கழிவு சாணம். அதைக் கோமயம் எனப் பெருமிதமாகக் கூறுவர். சாணியைக் கண்டு எவரும் அருவருப்பதில்லை. அருவருப்பை நீக்கச் சாணியால் மெழுகுவர். சாணித் தண்ணீர் தெளிப்பர். சாணி அற்புதமான கிருமி நாசினி. சாணியின் பலன்கள் பல. அது வயலுக்கு நல்ல பசளை. காய்ந்த சாணி அடுப்பெரிக்க விறகு, வெந்தசாணி நல்ல நீறு. சாணியின் நீறு திருநீறு. அது தெய்வத்தன்மையான நீறு. அதை உச்சியிலும் நெற்றியிலும் நெஞ்சிலும் தோள்களிலும் பூசுகிறோம். திருநீறுகொண்டு தடவும் இடம் சுத்தமாகும். அந்த இடம் நோய்நீங்கிச் சுகம் பெறுகிறது. திருநீறு நம்மைக் காக்கிறது. இவ்வளவு புனிதமான சாணியைத்தரும் பசுவின் புனிதத்தைச் சொல்லமுடியாது. புனிதமான தெய்வத்தன்மையுள்ள பசுவைக் கொன்றுதின்னலாமோ?

## யார் இந்த அலெக்சாண்டர் பிளமிங்

பென்சிலின் மருந்தை ஊசிமூலம் உடம்பிற் பாய்ச்சிக்கொள்ளும் முறையை உலகத்துக்குத் தந்தவர் சேர் அலெக்சாண்டர் பிளமிங். அவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் பக்ரீறியா பற்றிய துறையில் பேராசிரியராயிருந்தவர். சேர் ஹோவாட் புளோறி என்னும் விஞ்ஞானியுடன் இணைந்து பென்சிலின் மருந்தைக் கண்டவர். பெரிய விருதுகள் பரிசுகள் பெற்ற பெரியவர். நோபல் பரிசினையும் வைத்தியத் திறமைக்காகக் கூட்டாகப் பெறும் சந்தர்ப்பம் இவருக்கு 1945ஆம் ஆண்டில் கிடைத்தது.

## அமெரிக்கா அடுத்தவீடாகிவிட்டது

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் சேர்ந்தால் உலகத்துக்குப் பெருநன்மை உண்டாகும் என்று கவியோகி சுத்தானந்த பாரதியார் சொன்னவண்ணம் இன்று விஞ்ஞான வளர்ச்சியினால் உண்டான விந்தைகளில் ஒன்று தூரதேசங்கள் யாவும் எமக்கு அடுத்த வீடுகளாகவும், அக்கம் பக்கமாகவும் அமைந்துவிட்டன என்று கூறியவண்ணம் மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்கள் TeleGlobe நிறுவனத்தாரின் ஆரம்ப நாளில் மங்கல விளக்கேற்றி வைத்தார்.

## அறியவேண்டியவை

1. இலங்கையில் சீனித்தொழிற்சாலையுள்ள இடங்கள்
   கந்தளாய், கல்லோயா.
2. இலங்கையில் விளையும் ஏலக்காய் இனங்கள்
   மைசூர் இனம், மலபார் இனம்.
3. மிளகாயில் காரம் அதிகமான பகுதிகள்
   விதைகள், நடுநரம்பு.
4. பயிர்செய்வதற்கான போகங்கள்
   சிறுபோகம், பெரும்போகம்.
5. தோடை இனங்களை ஒட்டுவதற்கு உதவும்கட்டைகள்
   நாரத்தை, புளித்தோடை.
6. நல்ல தரமான கொய்யா இனங்கள்
   அலகபாத், சப்போட்டா.
7. நீரிழிவுக்காரருக்கு வாய்ப்பான தானியங்கள்
   குரக்கன், வரகு.
8. உருளைக்கிழங்கு பெருமளவில் விளையும் மலைநாடுகள்
   நுவரெலியா, பதுளை
9. கடும்புப் பாலில் அதிகமாகவுள்ளவை
   கொழுப்பு, புரதம்.
10. மனிதருக்குப் பயன்தரும் பூச்சியினங்கள்
    தேனீ, பட்டுப்பூச்சி.
11. சமையலுக்கு அன்றாடு தேவையான சுவைப்பொருள்
    வெங்காயம், மிளகாய். (கள்.
12. மரவள்ளித்தோட்டத்தில் நடக்கூடிய ஊடுபயிர்கள்
    வெங்காயம், பயறு.

### ஐந்து உலோகங்கள்

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.

### ஏழு உலோகங்கள்

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் வெண்கலம், தரா.

### கலப்பு உலோகங்கள்

செம்பு + துத்தநாகம் = பித்தளை
செம்பு + தகரம் = வெண்கலம்
செம்பு + ஈயம் = தரா

★ இறைவனை எந்நாமத்தாலும் போற்றலாம் ★



## பெரியவர் ஒருவரின் பசுமையான நினைவு

இளைஞன் ஒருவன் ஈர்க்கில் பர்ம்பன் என்னும் சிறிய பட்டம் ஒன்றைத் தன்கையால் கட்டி ஏற்றினன். அது ஏறவில்லை. பலமுறை முயன்றும் அது ஏறாமல் இழுபட்டதைக்கண்டு, அதைக் கையிலெடுத்துக் கவனித்துப் பார்த்தான். ஓகோ கொம்பு பெருத்துப் போய்விட்டது என்று கருதி அதில் ஓரங்குல நீளத்தைக் குறைத்து ஏற்றினன். அது ஏறவில்லை. ஓகோ வால்காணுது என்று கருதிக் கொஞ்சம் வாலை நீளச் செய்தான். பட்டம் ஏறவில்லை. பொறுமையை இழக்காமல் எப்படியும் பட்டத்தை ஏற்றிவிடவேண்டும் என்று கருதி, முச்சையை அளந்து பார்த்தான் அதிலே ஒரு திருத்தம் செய்தான். இப்படியெல்லாம் குறைத்தும், கூட்டியும் திருத்தியும் முயற்சிசெய்த அவன், பட்டத்தை உயர உச்சத்தில் ஏற்றி மகிழ்ந்தான். இவ்வாறே பாடசாலையில் பிள்ளைகளைப் படிப்பிக்கும்போது ஒவ்வொரு பிள்ளைமீதும் தனிக்கவனம் செலுத்தும் நல்லாசிரியனும் படாத பாடுபட்டு ஊக்கமும் முயற்சியும் குறையாது, சினக்காது, சீராது படிப்பித்துப் பாடத்தைப் புகட்டிப் பிள்ளையை உயர்த்தி விடுவார்.

இவ்வாறு விளக்கிக் கூறியவண்ணம் 1936ஆம் ஆண்டில் பரமேஸ்வரா பண்டித ஆசிரிய கலாசாலையை ஆரம்பித்து வைத்தவர் சிந்தனையாளர், தார்க்கிகர், கல்விமான், சைவப்பெரியார் புலோலி சு. சிவபாத சுந்தரம் அவர்கள்.

## ஸ்ரீ ஜெய ஜெய புவனேஸ்வரி ஸ்ரீலஸ்ரீ சாந்தானந்த சுவாமிகள் அருளியவை

1 கோபம் உள்ளவன் பாவம் செய்தே தீருவான்
2 பொருமைப்படுபவனுக்கு வெற்றி கிடையாது
3 கர்வம் மனிதனை அழிக்கும் சத்துரு
4 செருக்கு பாவங்களைப் பெருக்கும்
5 பிறர் மனம் நோவச் செய்பவன் அசுரனுவான்
6 பிறரை வெறுப்பவனைத் தெய்வம் வெறுத்துவிடும்
7 மனத்தூய்மை, நேர்மை, பொறுமை அன்பு மனிதப் பண்பு.
8 மனிதனுக்குக் கொடிய பகை பேராசை
9 வெறுப்பு, கோபம், பொருமை மனிதனை எரிக்கும்
10 சகிப்புத்தன்மை வெற்றிபெறச் செய்யும்
11 அகம் பாவம் இருந்தால் அருள் சுரக்காது
12 மமதை உள்ளவன் கடமை செய்யான்

## சைவம் வளர்த்த சான்றேன், தமிழ் வளர்த்த செம்மல்

ஈழநாட்டு இலக்கிய இலக்கண சமயப் பெரியார்களுள் எல்லாமாயிருந்து தொண்டுசெய்தவர், அதிலும் தமிழ்நாடறியப் பெரும்பணியாற்றியவர். அங்கேயே மாணுக்கர் பரம்பரையை உருவாக்கியவர் மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை அவர்களாவர். தமிழன்பர் திரு. வி. க. அவர்களையும் அவர்தம் சகோதரர் உலகநாத முதலியாரையும் உருவாக்கியவர் புலோலிப்பிள்ளை அவர்களே யாவர். பாடஞ்சொல்லுதல், பிரசங்கம் செய்தல், நூல்கள் பதித்தல், உரையெழுதுதல், கண்டனம் எழுதுதல், அட்டாவதானம் செய்தல், அகராதி தொகுத்தல் முதலிய அரிய சாதனைகளை அவர் தமிழ்நாட்டில் செய்து இளம் பராயத்திலேயே மறைந்தார். அவரைப்பற்றித் தமிழ்ப்புலவரும் பெரும் புரவலருமாய பாண்டித்துரை தேவர் பாடியுள்ளார்.

இருந்தமிழ் மொழியின் பொருளினை யுலகோர்
எளிதினிற் றெளிதர வின்றி
வருந்துத லொளிய வோரக ராதி
மாண்புற வமைத்தனன் வளங்கள்
பொருந்தியாழ்ப் பாண மாநகர்க் கதிர்வேற்
புலவனங் கதனையச் சியற்றி
மருந்தென வளித்தான் சென்னைவாழ் நமச்சி
வாயனு மாமதி யவனே.''




## அரிநெல்லி

சாதாரண நெல்லிமரத்திற் பார்க்கச் சிறியமரத்தில் சிறியகாய்கள் கொத்துக்கொத்தாகக் கொப்புகளில் காய்த்து மொய்த்திருக்கும் அழகுவாய்ந்தது அரிநெல்லி. ஆறுபட்டை கள்உள்ள அரிநெல்லி, அறுநெல்லி என வழங்கியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இது என்றும் பசுமையாய் உள்ளது. அதிக இடப்பரப்பைப் பிடிக்காத இம்மரத்தினை வீடுகள் தோறும் வளர்த்துப் பயன்பெறலாம். இதன் காய் மாத்திரமன்றி இதன் இலையும் வேரும் மருந்தாகின்றன. இதன் இலையை மோரிலிட்டுப் பருகலாம் என்பர். இது இருமலை நீக்குவதோடு, உட்சூட்டையும் தணிக்கும் என்பர். இதைத் துவையல் செய்தும், வடகம் செய்தும் பயன்படுத்துவர். இது கண்பார்வைக்கு நல்லது. இதன்வேர் வாந்தியைநிறுத்தும். ஓரடி ஆழமுள்ள குழியில் ஒரு கன்றை நாட்டினல் நான்கு ஆண்டுகளில் நன்ருகக் காய்க்கத் தொடங்கும்.



## இந்திய விடுதலை வீரர் வ. வே. சு. ஐயர் அவர்கள்

பாரதநாடு சுதந்திரமடைவதற்குப் படாதபாடுபட்டவர்களின் திருநாமங்கள் வரிநெடும் புத்தகத்தில் எழுதப் பெற்றுள்ளன. சிவனடியார் திருநாமங்களையே வரிநெடும் புத்தகத்தில் பட்டினத்தடிகள் எழுதவேண்டுமென்று விரும்பினர்.

புரட்சியாளர்களின் புகலிடமாய புதுவையில் புக்கிருந்து உயிரையும் பொருட்படுத்தாது பேசியும் எழுதியும் உணர்ச்சியூட்டிய நூற்றுக்கணக்கானேரில் செந்தமிழ் நாட்டுச் செம்மல்களுள் வ. வே. சு. ஐயர் என்னும் மூன்றெழுத்துப் பேர்வளி முரடர்களாய படைவீரர்களையும் பொலிசுக்காரரையும் புறங்கண்டவர்.

புகழ்பெற்ற ஸ்கொட்லண்யாட் பொலிசுக்காரர், இரகசியப் பொலிஸ்காரர் எல்லோரும் வாயைப் பிழந்து நிற்க; அவர்களுக்கூடாகச் சிங்கமென நடந்து அப்பாற் சென்றவர் அவர்.

சீமை அப்புக்காத்து என்னும் பரிஸ்ரர் படிப்புக்காக பிரித்தானியா சென்றவர், அங்கே விடுதலை வீரரான சவர்க்காருடன் தொடர்புகொண்டு வீரவுணர்ச்சி பாய்ச்சப் பெற்று, மேலும் தீவிரமடைவதற்கு நெப்போலியனின் வரலாற்று நூல்களையும் அவன் எழுதிய தன்யத்தன நூல்களையும் வாங்கிக் குவித்துப் படித்து வீரமுறுக்கேறி, உடல்வலுவையும் உண்டாக்கிக் கொண்டார்.

இவ்வளவு படிப்புகளிலும் திருக்குறளிலும், கம்பராமாயணத்திலும் மிகுந்த பற்றுள்ளவராய் அவற்றை நன்ருக ஆராய்ந்து கற்றுப் பல நூல்கள் எழுதியதோடு, திருக்குறளை அருமையான ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் வெளியிட்டார். கம்பரசனை அவருடைய காவியப் பயிற்சியைக் காட்டும் அருமையான நூல்.

லண்டன் மத்தியில் மேல்மாடியொன்றில் வாழ்ந்த அவரை, இரகசியப் பொலிஸ்காரர் சூழ்ந்த போது, யன்னல் வழியாகத் தாவிப் புறச்சுவரில் கழிவு நீர் வழியும் குழாயைப் பற்றிப் பிடித்து இறங்கியோடியபோது இராமாயணப் பிரதிகளையும் வாரிக்கொண்டே ஓடினுர்.

அவரைப் பிடிக்கலாம் எனக்கருதிய பொலிஸ்காரர் அவருக்கு முன்னுகவே துறைமுகத்தில் பதுங்கியிருந்தனர். அவர் தமது சூட்கேசுடன் தாடி மீசையுடன் மிடுக்காக நடந்து சென்ருர். வழிமறித்த பொலிசார் அவருடைய சூட்கேசில் வரகனேரி வெங்கடேச ஐயர் சுப்பிரமணிய ஐயர் என்பதன் குறுக்கம் - *V.V.S.* எனப் பெரிதாக எழுயதைக் கண்டு கைதுசெய்ய முயன்றபோது, அவர் கம்பீரமாக நான் "வீர விக்கிரமசிங்" என்று கூறி *V. V. S.* எழுத்துக்களுக்கு விவேகபூர்வமாக உடனடியாக விளக்கங் கூறினுர். பொலிஸ்காரர் இரண்டாம் முறையாக வாயைப் பிழந்து நின்ருர்கள். ஐயர் கப்பலேறிவிட்டார்.

லண்டனில் வாழ்ந்தபோது நெப்போலியனின் யத்தனங்களைக் கருத்தூன்றிப் படித்து நல்லதொரு யுத்த நூலையும் எழுதி வெளியிட்டார். அதனைப் படிப்பதற்கு இளைஞர்கள் பெரிதும் அவாவுற்றனர். லோகமான்ய திலகர் அந்த நூலை ஒருமுறை படிப்பதற்கு ஆசைப்பட்டார் என்ருல் வீரம் எவ்வளவில் அந்நூலில் செறிந்திருக்குமோ யாரறிவார். நாமறியோம்.

ஐயர் அவர்கள் லண்டனில் வாழ்ந்த காலத்தில் தீபாவளித் திருநாளைப் பெருமளவில் கொண்டாடி மகிழ்ந்தார். அதில் காந்தியடிகளும் பங்குபற்றினுர் என்பர். புகழ்பெற்ற டாக்டர் ரி. எஸ். எஸ். ராஜன் அவர்களும் அங்கே வாழ்ந்து பங்குபற்றினுர் என்பது வரலாறு.


பரிஸ்டராவதற்கு இராச விசுவாசப் பிரமாணம் எடுக்கநேர்ந்தபோது, வெள்ளைக்கார அரசனுக்கு நான் விசுவாசங் காட்டமாட்டேன் என வெளிப்படையாகக் கூறி வெளியேறிவிட்டார்.

கப்பலேறிய ஐயரவர்கள் புதுச்சேரியில் புகலடைந்து அரவிந்தர், பாரதியார் முதலானேருடன் நன்கு பழகியிருந்தார். ஐயரவர்கள் புதுச்சேரியில் துப்பாக்கித் தொழிற்சாலையொன்றை ஆரம்பித்து, 10,000 இளைஞர்களைப் பழக்கினுர் என்பர்.

### ஆராயவேண்டியவை - அறியவேண்டியவை சரியாக வழங்கவேண்டிய சமஸ்கிருத பரிபாஷை

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆச்சாரியா | — | பெண் ஆசிரியை |
| 2. | ஆச்சாரியானி | — | ஆசிரியரின் மனைவி |
| 3. | உபாத்தியாயா | — | பெண் ஆசிரியை |
| 4. | உபாத்தியாயனி | — | ஆசிரியரின் மனைவி |
| 5. | விதுஷி | — | வித்துவானன பெண் |
| 6. | பிராமணி | — | பிராமணனின் மனைவி |

யோகாசனப் பயிற்சி ஒருவனைக் கை தூக்கி விடுகிறது



## எமர்சன் மொழிந்தவை

உலகம் கடினமான இரும்பைப் போன்றது. அதன் மீது விடாமல் தொடர்ந்து ஓங்கி அடித்துத்தான் மக்கள் தங்களுக்கென ஓரிடத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

அன்றைக்குச் செய்யவேண்டியதைச் செய்து, அன்றைய தினத்தை விட்டுவிடவேண்டும். அன்று நடந்த குறைகுற்றங்களை முற்றாக மறந்துவிடவேண்டும். அடுத்த நாள் ஒரு புதிய நாள். அன்று செய்யவேண்டியனவற்றை நன்றாகச் செய்தால் முன்னேற்றம் உண்டு.

## ஐந்துக்கு ஒன்பது

காரைநகர் மணிவாசகர் சபை ஐந்தாம் வெளியீடு என்று சொல்லி, 1985 ஆம் ஆண்டு திருவாதிரை மலர் ஒன்றைச் சிறிய அளவில் அழகாக வெளியிட்டுள்ளார்கள். அதில் சிவம் பழுத்த ஒன்பது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அழகிய முன்பக்கத்தில் ஆடல்வல்லானின் அற்புதக்கூத்தும், அயலில் நின்று ஆனந்த பரவசத்தில் நோக்கும் அம்மையாரின் பொலிவும், கூடும் அன்பினில் கும்பிட்டவாறு நோக்கிநிற்கும் புலிக்கால் முனிவர், பதஞ்சலி முனிவர் ஆகியோரின் பக்தியும், வலியிழந்து திருவடிக் கீழ்க்கிடக்கும் முயலகனின் பணிவும் அருமையாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளன.

உள்ளே திருப்பனந்தாள் மடாதிபதி காசிவாசி, கயிலை முனிவர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான், இலங்கை மெய்கண்டார் ஆதீன முதல்வர் ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் ஆகியோரின் ஆசியுரையும் இடம்பெற்றுள்ளன.

உள்ளுடன் வரிசையில் மணிவாசகநெறி, திருமந்திரம், நான் தனக்கன்பின்மை, திருவாதிரையும் மார்கழியும், இலிங்கம், மூத்த திருப்பதிகங்கள், தாழ்வுறுந்தன்மையோடு, ஞானத்தின் திருவுரு, காட்டாதனவெல்லாம் காட்டி ஆகிய விடயங்கள் வந்துள்ளன. பாலா அச்சகம் அழகாக அச்சிட்டுள்ளது. விலை விபரத்தைக் காணவில்லை. விரும்பியோர் காரைநகர் மணிவாசகர் சபைக்கு ஏதேனும் அனுப்பிப் பெறுவார்களாக.

## சைமன் காசிச் செட்டி

புத்தளம் சிலாபம் எங்கும் தமிழ் மணத்த காலத்தில் கற்பிட்டியில் தமிழர் அதிகமாக வாழ்ந்தனர். கற்பிட்டியில் வாழ்ந்த தமிழரின் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே அவ்வூரவரான காசிச்செட்டியார் தமிழர் பழக்க வழக்கங்கள் என்னும் நூலை எழுதினார். அன்றி அவர் 1805 ஆம் ஆண்டுக்கு முன்பின்னாகத் தமிழ்ப் புலவர்கள் வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதினார். இலங்கை ஆங்கிலேயர் கைக்கு மாறிய காலத்திலேயே அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் வகித்த திறமைசாலி அவர். அவரே கசெற் என்னும் நானாவித விபரச் சஞ்சிகையை முதலில் வெளியிட்டு அரசாங்கத்தின் கசட்டியர் எனப் பெயர் பெற்றவர். அவர் நில அளவை நிபுணராயிருந்தார் என்பதற்குப் போதிய வரலாற்றுச் சான்றும் உண்டு. அதாவது, ஆங்கிலேயர் 19 ஆண்டுக் காலம் இலங்கைக் கரை நாடுகளை ஆண்டபின்னரே 1815ல் கண்டி அரசின் மலை நாட்டைப் பிடித்தனர். கரைநாட்டின் பரப்பு எவ்வளவு, என்று பிழையில்லாமல் கணித்தவரும் அவரே. அவருடைய திறமையை அறிந்த லண்டன் குடியேற்ற மந்திரியார் அவருக்கு நூற்றைந்து கினி பணம் அனுப்பிக் கௌரவித்துள்ளார். அவர் 1833 இல் நிறுவப்பெற்ற சட்டசபையில் காலப்போக்கில் பிரதிநிதியாகவும் நியமனம் பெற்ற பெருமைக்குரியவர்.

இலங்கைச் சட்டசபையில் தமிழ்பேசும் மக்களுக்காக முதலில் நியமனம் பெற்ற ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி முதலியார் இறந்து இரண்டு ஆண்டுகளின் பின்னரே 29-6-1838 ல் சைமன் காசிச்செட்டியார் நியமனம் பெற்றார். (குமாரசுவாமி முதலியார், சேர் இராமநாதனின் தாயார் செல்லாச்சியின் தந்தையாராவர்.) சைமன் காசிச்செட்டி முதலியாராயிருந்து சட்டத்தரணியாயும் புகழ்பெற்றவர். அவர் சந்ததியில் வந்து இன்று வாழ்பவர்களுள் ஒருவர் ஆங்கிலப் புலவராயும் இருக்கிறார்.


## லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம்

மேற்கு நாட்டு நவநாகரிகம் தலைவிரித்தாடும் உலகப் பெருநகரான லண்டனில் சைவப் பண்பாட்டைப் பேணிப்பாதுகாத்து வளர்த்துவரும் சங்கத்தாரை எவ்வாறு பாராட்டுவதென்று தெரியவில்லை. சைவசமயப் பெருங்குரவரான திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் மதுரையில் மங்கையர்க்கரசியார் மத்தியில், ''பரசமயத்திடை தொண்டு செய்யும் உமைக்காண வந்தனம்'' என்றருளினார். உம்மைக் கண்டு போக நாம் வந்தோம் என்றாற்போல, தென்னகத்து மடாதிபதிகள் ஆங்கெழுந்தருளிப் பாராட்டினாலோ என்று சொல்லிவைக்க ஆசையாயிருக்கிறது.

## நவாலிப் பிரசைகள் குழுவின் நன்றி

யாழ்பாணத்து நவாலியூரில் அமைந்துள்ள பிரசைகள் குழுவினர் அகதிகளுக்குப் புகலிடம் கொடுத்து ஆதரிக்கின்ற போக்கில், தமக்கு உதவிக்கரம் நீட்டிய மில்க்வைற் தொழிலதிபருக்கு நன்றிதெரிவித்து அவரை வாழ்த்தியுள்ளார்கள்.

★ தேசப்பணி செய்பவனிடம் தெய்வம் சாந்நித்தியமாகிறது ★



# சிவராத்திரி விரதமும் விழாவும்

### சிவத்தியானம்

“சிவனொடொக்குந் தெய்வம் தேடினுமில்லை
அவனொடொப் பாரிங் கியாவருமில்லை
புவனங்க டந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச்ச டைமுடித் தாமரை யானே”

— திருமூலர் திருமந்திரம்

“மகாப்பிரளய காலத்திலே அசத்தும் இல்லை, சத்தும் இல்லை. அந்த ஒன்று இருந்தது. அதனின்று முதற்கண் காமம் என்னும் பராசக்தி உளதாயிற்று”—இருக்கு

“பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு
பிரமனும்போய்
இருங்கடல் மூடி யிறக்கும் இறந்தான்
களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங்கொண்டு
கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை
வாசிக்குமே”.

—அப்பர் தேவாரம்

### அழியாது நிற்பவர் சிவபெருமான்

பிரமாவாகிய எனக்கும் விஷ்ணுவுக்கும் பிதாவாகியும், வந்திக்கற்பாலராம் தேவராயும், முடிவுகாலத்திலே சர்வலோகங்களையும் ஒடுக்குகின்றவராயும் எவர் இருக்கிறாரோ அவர், ஏகரும், சிரேஷ்டரும் வரிஷ்டருமாகிய சிவபெருமானேயாவர்.

—சரோபநிடதம்

“நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறுகோடி நாராயணர் அங்ஙனே
ஏறுகங்கை மணலெண்களில் இந்திரர்
ஈறில்லாதவன் ஈசன் ஒருவனே”

— அப்பர் தேவாரம்

### பிரமம் எனப்படுவது சிவம்

“அளக்க வொண்ணாததாய், உவமனில்லாததாய் பராத்பரமாயுள்ள பிரமமானது சிவம். அது சுவயமே பராத்பரமாயும் சுத்தமாயும் இருத்தலாற் சிவம் எனப் பெயர்பெறும். மேன்மையினாலும் பேருருவமுடைமையினாலும் அது பிரஹ்மம் எனப்படும்”.

—காரணாகமம்

“சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம்
மேனியெம்மான்
அவனெனை ஆட்கொண் டளித்திடுமாகில்
அவன்தனையான்
பவனெனுந் நாமம் பிடித்துத் திரிந்துபன்
னாளழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப் பொழியானென்
றெதிர்ப்படுமே”.

— அப்பர் தேவாரம்

“பாடற் கினிய வாக்களிக்கும்
பாலும் சோறும் பரிந்தளிக்கும்
கூடற் கினிய அடியவர்தம்
கூட்டம் அளிக்கும் குணம் அளிக்கும்
ஆடற் கினிய நெஞ்சேநீ
அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
தேடற் கினிய சிவம் அளிக்கும்
சிவாயநம என்றிடு நீயே.”

—அப்பர் தேவாரம்

### விரதவியல்

ஆறுமுக நாவலர் அவர்கள் தமது இரண்டாம் சைவ வினாவிடையில் விரதவியல் என்னும் பகுதியில், விரதமாவது, “மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலுங் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதல்” என்பர்.


### சிவவிரதம்

சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கப்பெறும் விரதங்கள் சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கலியாணசுந்தர விரதம், சூலவிரதம், இடபவிரதம் என்று உபதேசகாண்டம் கூறும். பிரதோஷவிரதமும் சிவவிரதமேயாம்.

“தொல்லைய வல்வினை கழித்துத்தரும்
சோமவாரம் ஆதிரை நோன்பன்றிப்
புல்லிய உமாம கேச்சுரம் சிவராத்திரி
முறையிற் பொருந்த நோற்கப்

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

★ நல்லவரைத் துன்புறுத்துபவன் தானே விரைவில் அழிகிறான் ★



## நடமாடிய நல்ல குருநாதன்

குகைகளிலும் குடில்களிலும் மடங்களிலும் அடைபட்டுக் கிடக்காமல் மௌன தவஞ்செய்து சுயநலப்போக்கைக் கொள்ளாமல், எல்லோருக்கும் காண எளிவந்து, எங்கும் உலாவி, எல்லோரையும் கூவியழைத்து, அவரவர்க்குரியதாக, அவரவர் பக்குவமறிந்து, உபதேசம் வழங்கி, ஆட்கொண்டவர் எங்கள் நாட்டவர் செய்த தவத்தால் வந்து தோன்றிய சித்தர், சுவாமிகள், குருநாதன். காவியுடுக்காது வெண்டுகிலணிந்து மக்கள் மத்தியில் ஒருவராய் உலாவியவர் அவர்.

சிவபூமியாகிய இலங்கையின் வடபால் இராசதானியாயிருந்த நல்லூரில்எழுந்த கந்தனாலயத்துத் தேரடியில் குந்தியிருந்து செல்லப்பா சுவாமிகள் பெருக்கிய ஞான வெள்ளத்தில் மூழ்கி, அவரின் திருவாய்ப்பிறந்த நான்கு மகா வாக்கியங்களைக் கேட்டுணர்ந்து உய்திபெற்றவர் அவர்.

தாம் கேட்ட ''ஒரு பொல்லாப்பும் இல்லை, முழுதும் உண்மை, நாமறியோம் ஆரறிவார், எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்'' என்னும் முடிந்த முடிபுகளை வைத்து, நற்சிந்தனை என்னும் தலைப்பில் நாட்டவருக்கு ஞான விருந்தளித்தவர் அவர். மிகச்சுருக்கமான சிவஞான போதம் என்னும் சிறிய நூலுக்கு வழிநூலாக எழுந்த பெருக்கமான சிவஞானசித்தியார் என்னும் பெரியநூல் போல் விளங்குவது நற்சிந்தனை.

நற்சிந்தனையின் ஆழத்தையும் நீள அகலத்தையும் நானிலம் அறியும் வகை ஆங்கிலேயர் அருமையாக மொழிபெயர்த்த மகிமையால், அவர் உபதேசங்கள் ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகள் எங்கும் வியாபகமாய் உள்ளன.

இது அமெரிக்கா வரை கேட்கவேண்டும் என்று அவர் கூறியருளியவண்ணம் அது உலகம் எங்குமே ஒலிக்கிறது. ஈழத்துச் சித்தர் பரம்பரையில் எங்கள் காலத்தில், எங்கள் கண்காண எங்கும் உலாவி, அவர் சுவாசித்த காற்று நாம் சுவாசிக்குமாறு மெல்லென வீசுகிறது.

சரியை, கிரியை ஆகியவற்றுக்கப்பால் யோகநெறியில் சிறந்து விளங்கிய அவர் திருநாமம் யோகர் எனவே ஒலிக்கிறது. அவருடைய மூச்சுப்பட்ட ஆச்சிரமங்கள் சிவதொண்டன் நிலையங்களாகவே ஒளிவீசுகின்றன.

## திருவள்ளுவர் நூலகம் சிறுவர் பாடசாலை


மானிப்பாய் மேற்கு திருவள்ளுவருக்குப் பெருமதிப்புக்கொடுத்துள்ளது. அன்று ஒரு கொட்டில் கட்டித் திருவள்ளுவர் பெயரால் வாசிகசாலை உருவாக்கியவர்கள் இன்று மண்டபம் அமைத்து வாசிகசாலை, நூலகம், சிறுவர் பாடசாலை நடாத்துகிறார்கள். உள்ளூரவர் ஆயிரமாயிரமாக உபகரித்துள்ளார்கள்.

அந்த ஊரில் பெண்ணெடுத்த அண்ணா கோப்பி நடராசா அவர்களும் கைகொடுத்துள்ளார்கள். மில்க்வைற் தொழிலதிபர் அன்றும் இன்றும் உபகரித்த வள்ளன்மையை உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் முதலானோர் பாராட்டினார்கள். நூலகம் இனி மாடிக் கட்டடமாய் வளரவேண்டுமென்பது எமது வாழ்த்து. வளர்க வாழ்க. தமிழ்நாட்டில் திருக்குறள் சிறப்பிடம் பெற்ற அளவுக்கு எங்கள் பிரதேசமும் பெறவேண்டும். திருக்குறள்போல் ஒரு நூல் உலகில் இல்லையென்று பன்மொழிப்புலவர்கள் கூறியுள்ளார்கள், நல்ல யோகாப்பியாசகராய சதாசிவம் அவர்கள் அன்று தலைமைதாங்கினார்

## இணைப்பு வரவேற்கத்தக்கது

ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள பல்வேறு நாடுகளுள் பிரான்ஸ், இங்கிலாந்து வரலாறு படைத்த பழைய நாடுகள். இரண்டும் ஒன்றை ஒன்று வன்மையாக எதிர்த்து இடையிடை பெரிய போர்கள் நடத்திய நாடுகள். வெற்றி தோல்வி ஒருபுறமிருப்பப் பகைமை தீராமலே இருநாடுகளும் இருந்தன. இருநாடுகளின் பகைமை எப்போது ஆரம்பித்தது என்பது வரலாற்றாய்வாளருக்குச் சிக்கலாகவே இருந்துவந்தது. நெப்போலியன் காலத்துக்கு முன் இருநாடுகளுக்குமிடையில் ஏழாண்டு யுத்தம் நடைபெற்று 1763இல் சமாதானம் பாரிஸ் நகரில் உண்டானது அதிலேதான் பிரான்ஸ் தனது கனடாவை இங்கிலாந்துக்குத் தாரைவார்த்துச் சிறுத்தது. நெப்போலியன் இங்கிலாந்தையே விழுங்க முயன்றதும் உண்டு. ஆனால் இருநாடுகளுக்குமிடையில் உள்ள கால்வாயை இலகுவில் கடக்க முடியாது யுத்தத்தில் தோற்றதும் உண்டு. பின்னர் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 1902ஆம் ஆண்டில் இரண்டு நாடுகளுக்குமிடையில் நிரந்தரமான சமாதான ஒப்பந்தம் எழுதப்பெற்றது, பிரான்ஸ் மொழியில் என்றென்றே கோடியல் என வழங்கும் சமாதானம் சிரஞ்சீவியாக வளர்ந்தது. அது இரண்டு நாடுகளையும் உலகமகா யுத்தங்களில் நேசநாடுகளாகவே கண்டது. அது இன்று நன்றாகப் பிணைந்து முறுக்கேறி இருபத்தொராம் நூற்றாண்டினரின் போக்குவரத்துக்குச் சாதகமாக ஐம்பது கிலோ மீற்றர் நீளத்தில் சுரங்கப் பாதையமைத்து றெயில் போக்குவரத்தைக் காணப்போகிறது. கால்வாய் கால்வாயாக வற்றாமல் தடைப்படாமல் இருப்பக் கீழாலே அந்தர் வாகினியாகப் போக்குவரத்து நடைபெறப்போகிறது. எமக்கும் ஒரு அயல்நாடு பண்பாடு கலை கலாச்சரம் தந்துதவியவாறு உள்ளது. அதுவும் இதுவும் இணையும் சாத்தியக் கூறு உதயமானால் வெகு இலகுவாக நிறைவேற்றலாம்தானே.

★ நல்லதைச் செய்தவன் கெட்டநிலை அடையான் ★



## உரைநடை வளர்ச்சி

தமிழில் உரைநடை வளர்ச்சியில் ஆறுமுகநாவலர் ஒரு திருப்புமையத்தைக் கொண்டிருந்தார். அவருடைய மாணுக்கர் வரிசையில் வந்த நா. கதிரைவேற்பிள்ளையின் மாணுக்கன் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார். உரை நடையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உபகரித்தவர். தம்மை எழுதத் தூண்டியவரும், உருவாக்கிவிட்டவரும் மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை அவர்களேயாவர் என்று திரு. வி. க. வெகு உருக்கமாக எழுதியுள்ளார்.

திரு. வி. க. ஆழ்ந்த தமிழ்ப்பயிற்சியுடையவர். அவர் அரசியல் வாழ்விற் புகுந்து நாளாந்தம் பொதுமக்களோடு நெருங்கிய தொடர்புகொண்டமையால் அவர் எழுத்து சனரஞ்சகமாயமைந்தது. ஆற்ரெழுக்குப்போல தடையில்லாமல் பிரவாகித்துப் பாய்ந்து பரந்தது. தொழிலாளர் தலைவராயும் பத்திராதிபராயும் இருந்த அவருக்கு பாடசாலை ஆசிரியர் பணியும் தெரியும். செய்யுள் நூல்களை வசன நூல்களாகப் பெயர்த்து உருட்டிவிடுவதில் அவருக்குச் சிரமம் இருக்கவில்லை. திரு. வி. க. அவர்கள் தமக்குப் பிறகு நல்ல தமிழ் எழுதுவதற்கு இன்னுமொரு இரண்டெழுத்துக்காரனை உருவாக்கிவிட்டார். அவரே தமிழ்கூறும் நல்லுலகம் நன்ருக அறிந்த திரு. மு. வ. அவர்களாவர். திரு. மு. வ. குழந்தையுள்ளம் படைத்தவர்.

## பழுத்தபழம் நிலத்தைநோக்கி விழுந்தது ஏன்?

அன்ரெருநாள் ஐசாக் நியூட்டன் என்பார் அப்பிள் மரத்திலிருந்து ஒரு பழம் நிலத்தை நோக்கி விழுந்ததைக் கண்டார். அந்தப்பழம் மேலே போகாமல் நிலத்திலே விழுந்ததற்குக் காரணம் பூமியின் இழுப்புச் சக்தியேயாகும் எனக்கண்டார். அதற்கு ஒரு விதியையும் தம் பெயரால் கண்டார். அந்த விதி அண்மையில் அயன்ஸ்ரீன் என்பவரால் திருத்தப்பெற்றதாயினும் புவியீர்ப்புப் பற்றி முதலில் ஆராய்ந்த சேர் ஐசாக் நியூட்டனின் புகழ் இன்றும் நிலவுகிறது. அவர் கணித மேதையாயும் பேராசிரியராயும் இருந்தார். அவர் காலம் 1642 - 1727.

## சைவ மூதாட்டியார்

சிவபெருமானை வானத்தான் என்றும், வையத்தான் என்றும், அங்கே உள்ளவர் என்றும், இங்கே உள்ளவர் என்றும் சொல்லுவார் சொல்லி நிற்க; அவரைத்தன் நெஞ்சிலே கண்டு நிறுத்தி, அவர் திருநடனச் சிறப்பையும் கண்டு பேரானந்தமடைந்தவர் சைவப் பெருமாட்டி. புனிதவதியார் என்று பூர்வாச்சிரமப் பெயர் தாங்கி, இல்லறமேற்று நல்லறச் செயல்கள் புரிந்த பெருமாட்டியின் தெய்விகத் தொடர்பைக் கண்ட கணவன், மெதுவாக அவரை விட்டு விலகி, வேறெரு ஊரை நண்ணி அங்கே ஒரு பெண்ணை மணந்து, பெற்ற, பிள்ளைக்கு தெய்விகத் தொடர்புடைய பெருமாட்டியின் புனிதவதித் திருநாமத்தை வழங்கி வாழ்ந்தவன், உலகறிய அந்தப் பெருமாட்டியைத் தெய்வமென வணங்கினுன். கணவன் தன்னை வணங்கிய பின்னர், புனிதவதியார் தம் அழகுக் கோலத்தை நீத்து எலும்பும் தோலுமாய் இறைவழிபாட்டில் தீவிரமாயீடுபட்டுத் திருமுறைகள் பாடியருளினுர். அவர் முதலிற் பாடியருளியவராகலில் அவர் பாடல்கள் மூத்த திருப்பதிகம் எனப் பெயர் பெற்றது. அவரின் ஒட்டியுலர்ந்த கோலத்தில் தாளமேந்திய வண்ணத்தில் அமைந்த திருவுருவம் பொலனறுவைச் சிவன் கோயிலிலிருந்து இன்று கொழும்பு நூதனசாலையை அலங்கரிக்கிறது. அன்னையார் இறைவனுக்கே இனிய அம்மையாராய் வாழ்ந்தவர். அவர் தமிழ்நாட்டின் காரைக்கால் ஊரில் வணிகர் மத்தியில் தோன்றியவராகையால் காரைக்காலம்மையார் எனத் திருத்தொண்டர் மத்தியில் சிறப்புப் பெற்ருர்.


## வண்ணைச் சிவாலயம்

இலங்கை சிவபூமி. இலங்கையெங்கும் சிவாலயங்கள் நிறைந்திருந்த காலம். ஒரு காலம் இலங்கையை ஆண்ட இராவணனும் ஈஸ்வர அனுக்கிரக மிகுதியால் இராவணேசுவரன் எனப்பெயர்பெற்றவன். மகாசேனன்தான் ஏராளமான சிவாலயங்களைத் தகர்த்துத் தவிடுபொடியாக்கியதாகத் தன் மகா வம்சத்தில் எழுதச் சொன்னுன். இராசசிங்கன் கண்ணிற் கண்ட இடமெங்கும் சிவாலயங்கள் அமைக்கச் செய்தான். சிவபெருமான் கொடியவர்களுக்கும் கொடுத்து, நீண்ட கயிறுவிட்டு ஆடல் பார்ப்பது வழக்கம். நீண்டகயிறு கொடுக்கப்பெற்ற அற்ப மனிதர்கள் பிறரை அலட்சியம் பண்ணி அடக்கி ஆட்டுவித்தலும் உண்டு. ஆட்டம் ஓயும் நாள் விரைவில் விடிவதும் உண்டு.

போதாக்குறைக்குப் புண்ணரண்ணனும் வந்தவாறு போர்த்துக்கேயர் முன்னர்வந்து திருக்கோயில்களைத் தகர்ப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டு என்ன கொண்டு போனுர்கள். தொடர்ந்துவந்த ஒல்லாந்தர் சில காலத்தின்பின் மனந்திருந்தி எங்களை வாழவிட்டார்கள்.

நாங்கள் வாழத் தொடங்கிய காலத்தில் 1734ஆம் ஆண்டளவில் மலர்ந்தது நல்லூர்க் கந்தனுலயம். அப்பனே முருகா! அதனைத்தொடர்ந்து 1791 அளவில் மலர்ந்தது வண்ணைச் சிவாலயம். சிவ. சிவ.

★ கோபத்தால் நல்ல நினைவுகள் கெடுகின்றன ★



## ஆசிரியர் பகுதி

[தாங்கள் மாத்திரம் ஆசிரியர் அல்லீர். இந்தியாவில் முப்பது லட்சம் ஆசிரியர்கள் ஒன்பது கோடியே ஐம்பது லட்சம் மாணாக்கர் மாணாக்கியர்களை ஆறு லட்சம் பாடசாலைகளில் மனிதராக்க முயற்சி செய்கிறார்கள். வருங் காலச் சமுதாயத்தை உருவாக்கிவிடும் பெருவாய்ப்பு உங்கள் மேலது. அது வாய்ப்பும் கடமையுமாக அமைதல் வேண்டும். சரிதானே?]

### C. பாடத்தின் திரள்

1. பாடத்தைப் பற்றி அதிகமாக அன்றி கண்டபடி விளக்க வேண்டாம். பிள்ளைகள் தொழிற்பட்டு விளக்க வழிகாட்டவும்.
2. தாங்கள் எதனை விளக்கப் போகின்றீர்கள் என்பதை நன்றாக அறிந்துகொள்ளவும். தயவுசெய்து எடுத்த அலகைவிட்டு விலகிப் போகவேண்டாம்.
3. விளக்கங்களை இலகுவான தெளிவான எளிய சொற் களில் விளக்கவும்.
4. விளக்கம் பொதுவாகவும், திருப்திகரமாகவும், உதாரணபூர்வமாகவும் அமைதல் வேண்டும். ஓர் உதாரண விளக்கம் போதாது என்பதைக் கருத்திற் கொள்ளவும்.
5. பொதுவான விளக்கம் நிறைவேறியபின், பிள்ளைகளிடம் விளக்கம் கேட்டு உற்சாகமூட்டவும்.
6. எடுத்துக்கொண்ட பாடத்துக்கமைய விளக்கத்துக்கான உபகரணங்களை ஒழுங்காகக் காண்பிக்கவும், காட்சிக்கு வைக்கவும்.
7. உபகரணங்களுள் படங்கள் முதலியவை கவனமாற்றத்தையோ, கருத்து மாற்றத்தையோ உண்டாக்காமல் கவனித்துக் கொள்ளவும்.
8. உபகரணங்கள் வெறும் காட்சிப்பொருளாக மாத்திரம் அமையாமல், பிள்ளைகள் பரிசீலனை செய்வதற்கான முறையில் அமைவனவாயும் இருத்தல் வேண்டும்.
9. கரும்பலகையைத் தாராளமாகப் பயன்படுத்தவும்.
10. கரும்பலகையில் துப்பரவாகவும் அழகாகவும் தெளிவாகவும் துலாம்பரமாகவும் எழுதிக்காண்பிக்கவும்.

## மூன்றும் மொழி

இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தென் இலங்கையில் சில பாடசாலைகளில் மூன்றும் மொழி யொன்றைக் கற்பிக்க முயன்றபோது, அது இந்தி மொழியாயிருத்தல் நல்லதெனக் கண்டனர். இந்தி படிப்பிக்க விரும்பிய பாடசாலைகள் ஹன்வல மத்திய மகாவித்தியாலயம், தேஸ்ரன் மகாவித்தியாலயம், கலப்பிட்டியாவ மத்திய மகாவித்தியாலயம், கலுபோவில மகாவித்தியாலயம், ஹவ்லொக் மகாவித்தியாலயம், உடஹாமுல மகாவித்தியாலயம், கம்பளை மகாவித்தியாலயம், வந்துரும்ப மகாவித்தியாலயம், களந்தேனிய மத்திய மகாவித்தியாலயம். இவற்றின் வேறுய்ப் பட்டப் படிப்புக்கான முறையில் பிரிவினுக்கள் படிப்பிக்க முயற்சி செய்ததும் உண்டு.

## ஊக்கந்தருவது வேளாண்மை

ஆக்கம் வளர்ப்பது வேளாண்மை
அமைதி யளிப்பது வேளாண்மை
ஊக்கம் தருவது வேளாண்மை
உலகை ஆள்வது வேளாண்மை

மண்ணை என்றும் வளமாக்கி
மகசூல் குவிப்பது வேளாண்மை
உண்ண உணவும் உடுக்கைகளும்
உதவிக் காப்பது வேளாண்மை

செய்யுந் தொழிலைச் சீர்தூக்கின்
சிறந்து நிற்பது வேளாண்மை
வையம் உய்ய எந்நாளும்
வளர்ந்து வருவது வேளாண்மை.

**பேராசிரியர் உ. இராமநாதபிள்ளை**
— நெல் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு
(ஆதாரம்: வளரும் வேளாண்மை)

## தமிழ்ப்பெரியார் இருவருக்கு ஆயிரம்பிறை ஆண்டு

சிலம்பின் செல்வர் என்று பெயர்பெற்ற கலாநிதி ம. பொ. சிவஞானக்கிராமணியார் 26-6-86ல் எண்பதாண்டு வாழ்ந்த பெருமை பெறுகிறார். இங்ஙனமே வாகீச கலாநிதி எனப்பெயர்பெற்ற கி. வா. ஜகந்நாதையர் அவர்கள் 11-4-86இல் எண்பதாண்டுப் பராயமடைந்த பெருமை பெறுகிறார். இருவரும் இன்னும் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் பரவுவார்களாக. இவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள். வாழ்க! பணிசெய்க!!

★ தானே தன்னைத் திருத்திக் கொள்ளல் நல்லது ★



13-2-1879 — 2-3-1949

## இந்தியாவின் இன்னிசைப் பறவை

தமது எழுபதாம் ஆண்டுப் பூர்த்திவிழாவின்போது, பெரும் புலமையும் பேச்சாற்றலும் வாய்ந்த பெண்கள் திலகம், வாழ்வுக்குள் மரணமும் மறைந்துநிற்கும் என்னும் பொருள்பட, "In the midst of life we are in death" என்று சூசகமாகக் குறிப்பிட்டு, அடுத்தமாதம் ஆரம்பித்தபோதே மரணமானார்.

அவர் மரணமடைந்தாலும் அவரின் ஆங்கிலப்புலமை அவனியெல்லாம் நிலவியொலிக்கும். அவர் பேச்சின் மூச்சு எங்கும் காற்றோடு காற்றாய் ஒலிக்கும். காந்தீயத்தில் தன்னைக் காந்தம் ஏற்றிக்கொண்ட பெண்கள் வரிசையில் அவருக்கு முன்னணியில் இடமுண்டு. அவர் பலவழிகளில் முன்னோடி. கலப்பு விவாகம் செய்த பெருமாட்டி. ஆங்கிலச் செய்யுளுலகில் அவருடைய பாடல்கள் யாழுக்கேற்ற உணர்ச்சி இனத்தவையான லிறிக்ஸ் வகையைச் சார்ந்தவை. அவருடைய பாடல்கள் வளையற்காரன், ஓடக்காரன் முதலிய தலைப்புக்களில் உணர்ச்சியூட்டுவன. அரசியலில் புகுந்து அவர் பேசிய பேச்சுக்கள் எவரையும் தட்டி வீரவுணர்ச்சியூட்டுவனவாயிருந்தன. சுதந்திரத்துக்காக வெயர்வை சிந்திய பெண்கள் திலகங்களுள் அவருக்கோர் தனியிடம் உண்டு. பாரதநாடு பெண்கொடியாக நடந்ததும் உண்டு. காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார், ஔவையார் வரிசையில் மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக்கப்பால் ரமாபாய் ரானடே, பண்டித ரமாபாய், பரோடா மகாராணி, கஸ்தூரிபாய், கமலாதேவி, அபாஸ் தியாப்ஜி, ருக்குமாபாய், ஓம்விதிசாஸ்திரி மாகி, லட்சுமிபாய் ரானடே, கமலா நேரு, விஜயலட்சுமி பண்டிற் முதலானோர் பெரும் பெயர்பெற்றவர்கள். சரோஜினியும் கமலாதேவியும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அண்ணியும் மச்சானுமானவர்கள்.

சக்கரவர்த்தி இராசகோபாலாசாரி அவர்கள் முதல் இந்திய தேசாதிபதி நாயகமாயமர்ந்த காலத்தில், சரோஜினி நாயுடு உத்தரபிரதேசத்தின் தேசாதிபதியாய் அமர்ந்து, தேசசேவை செய்தவர். அவரைப்பற்றிய முழு வரலாற்றையும் எங்கள் பெண்கள் நன்கறிதல்வேண்டும் அவர் இலங்கைக்கும் வருகைபுரிந்து பல மேடைகளில் பேசியுள்ளார். அவரைப்பற்றியும், அவருடைய பேச்சைப்பற்றியும் விபரமாக அறிவதன்முன் அவர் பாடிய பாடல் ஒன்றைச் சுவைப்போமாக. அது பிருந்தாவனத்தின் குழல் ஊதி என்பதைப் பற்றியது. பாடல்கள் இதோ,

## THE FLUTE-PLAYER OF BRINDABAN

Why doest thou play thy matchless flute
Neath the Kadamba tree,
And wound my idly dreaming heart
With poignant melody,
So where thou goest I must go,
My flute - player, with thee?

Still must I like a homeless bird
Wander forshaking all;
The earthly loves ond worldly lures
That held my life in thrall,
And follow, follow answering
Thy magical flute - call.

To Indra's golden - flowering groves
Where streams immortal flow,
Or to sad Yama's silent courts
Engulfed in lampless woe,
Where'er thy subtle flute I hear
Beloved I must go!

No peril of the deep or height
Shall daunt my winged foot;
No fear of time - unconqured space,
Or light - untravelled route,
Impede my heart that pants to drain
The nectar of thy flute!

## ஒய்வூதியம் பெறுவோர் சங்கம்

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியை மையமாகக் கொண்டியங்கும் ஒய்வூதியம் பெறுவோர் சங்கத்தார் பணிகளைப் பாராட்டிப் பேசிய மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா, சங்கத்தார் அன்னதானம் செய்துவந்ததைத் தொடர்ந்து ஞானதானமும் செய்துள்ளார்கள் என்றார். மேற்படி சங்கத்தார் சமய அறிவுப் போட்டி நடத்திப் பரிசுகள் வழங்கிய வைபவத்தைச் சிறப்பித்தார் தொழிலதிபர்.

★ ஆசை, கோபம், பயம் முகத்தை மாசுபடுத்தும் ★

## சிவராத்திரி....

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பல்வினையுந் தொலைத்திடு கேதார மணவிரதம்**
**இவை பரமன் நோன்பு**
**கொல்லுறு சூற்படை விரதமென்னும்**
**எட்டும் சிவவிரதம் குனிக்குங்காலே.''**

### சிவராத்திரி வகை

சிவராத்திரி பலவகைப்படும். அவை நித்திய சிவராத்திரி, மாதசிவராத்திரி, யோக சிவராத்திரி, பட்சசிவராத்திரி, மகாசிவராத்திரி என்பனவாம். மகாசிவராத்திரியை மாகசிவராத்திரி எனவும் வழங்குவர்.

நித்திய சிவராத்திரியாவது மாதந்தோறும் வருகின்றனவாய வளர்பிறை தேய்பிறைக் காலங்களின் சதுர்த்தசி நாள்களில் அனுட்டிக்கப்பெறுவதாகும். மாதசிவராத்திரி மாதந்தோறும் தேய்பிறை சதுர்த்தசிக் காலத்தில் அனுட்டிக்கப்பெறுவதாகும். யோகசிவராத்திரி என்பது சோமவார தினத்திலே சூரியோதயம் முதல் பத்து நாழிகை நேரம் அமாவாசை நிலவுங்காலமாகும். பட்சசிவராத்திரியாவது தைமாதத்தில் தேய்பிறைக் காலத்துப் பிரதமை முதல் பதின்மூன்று நாள்கள் விரதமனுட்டித்துப் பதினன்காம் நாள் பூர்த்திசெய்வதாகும்.

மகாசிவராத்திரி என்னும் மாகசிவராத்திரி, மாசி என்னும் மாக மாதத்துத் தேய்பிறை காலத்துத் சதுர்த்தசியிலே அனுட்டிக்கப்பெறுவதாகும்.

(இம்முறை சனிப்பிரதோஷத்தோடு, சூரியன் மறையும்வரை திரயோதசி இருப்பதும், அடுத்தநாள் பகல் முழுவதும் சதுர்த்தசி இருப்பதும் உத்தமமான சந்திப்பு என்பர். அடுத்து வருகின்ற அமாவாசையில் திருவோணம் நிலவுமாயின் மிகவும் நல்லது. ஆனல் திருவோணம் முன்னுக்கு வந்துவிட்டது.)

## யாழ்க்கோ வரைவுளது

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் திருநெல்வேலி கிழக்கு முதல் கோப்பாய்வரை நல்ல பயன்மிக்க பணிபுரிகிறது. பசுமைப் புரட்சிக்கு அடுத்தாற்போல், பால்நிறைவு கண்டு வெண்மைப் புரட்சிக்கு விரையும் சங்கத்தார் மத்தியில் மில்க்வைற் தொழிலதிபர் அபிவிருத்திக்கான ஆலோசனைகள் கூறித் தம்முடைய ஆதரவையும் தெரிவித்தார்.

## திருவள்ளுவர் தினத்தில்

நீர்வேலி அச்செழு ஊர்கள் இணைந்து நடாத்திய திருவள்ளுவர் தினத்திலே, பிரமுகர்கள், பண்டிதர்கள், பண்டிதைகள் மத்தியில் மில்க்வைற் தொழிலதிபர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, தாம் பஸ்வண்டிகளில் திருக்குறள் பலகைகளைத் தொங்கவிட்டும், சவர்க்கார மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டும் பரப்பும் வகையினைப் பேசியதோடு, திருக்குறள் தமிழருக்கேயன்றி, உலகினர்க்கும் உத்தமமான உயர்ந்தநூல் எனக் கூறினர்.

## நகுலேசுவரம் முதல் திருக்கேதீசுவரம் வரை

எண்பத்தொரு ஆண்டுகள்வரை வாழ்ந்து தமிழ் நாடெங்கும் கால்நடையாகத் திருக்கோயில் வலம்வந்து நான்காம், ஐந்தாம், ஆறும் திருமுறைகளைப்பாடி, மக்களைத் தட்டியெழுப்பிச் சைவ மறுமலர்ச்சிப் பாதை அமைத்த சைவத் தமிழ்த் தேசபிதா திருநாவுக்கரசு நாயனர். எல்லோருக்கும் அப்பர். ''ஏற்றாய் அடிக்கே,'' என்று தொடங்கி, ''புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்'' என்று திருவடி வழிபாட்டுக்கு வழிகாட்டிய அப்பெருமானர் இன்று நகுலேசுவரத்திலிருந்து எழுந்தருளித் திருக்கேசுவரம் சார்கின்ருர். வரவேற்று, வணங்கி வாழ்த்தி விடை கொடுப்பது எங்கள் கடமை.



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இந்துமாமன்ற மாணுக்கர் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியும், திருவுருவத்தை வடித்துக்கொடுத்த விஸ்வப் பிரம்மஸ்ரீ மோதிலால் திறனும் பாராட்டுக்குரியவை. பாராட்டுகிறோம்.

அப்பர் திருவடிகளுக்கு எங்கள் கும்பிடு. அப்பரே கூப்பிய கைகளால் கும்பிட்டுக் காட்டியுள்ளார். அவர் எமக்கும் சைவத் தமிழுலகத்திற்கும் அப்பர்.

## மார்ச்மாத....

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| 24. | திங்கள் | — | வண்ணை வைத்தீசர் தேர் |
| 25. | செவ்வாய் | | பூரணை விரதம் |
| 26. | புதன் | — | தசாவதானி நா. கதிரைவேற்பிள்ளை தினம் |
| 27. | வியாழன் | — | சைமன் காசிச்செட்டி நினைவு |
| 28. | வெள்ளி | — | காரைக்காலம்மையார் குருபூசை பெரியவெள்ளி |
| 29. | சனி | — | மருதடி விநாயகர் கொடி |
| 30. | ஞாயிறு | — | ஈழகேசரி பொன்னையா தினம் |

## திருக்கோணமலையில் அன்னம்பாலிப்பு

திருக்கோணமலையில் ஒரு மூலையில் ஸ்ரீ சண்முக அறக்கட்டளை என்னும் இயக்கம் இல்லம் அமைத்து சிறுவர் சிறுமியரை வளர்த்துவருகிருர்கள். அதன் பரிபாலனச் செயலராகக் கடமையாற்றும் செல்வி நடராசா அன்று 1-2-86 ஆம் நாளில் மில்க்வைற் மீனுட்சிப்பிள்ளை கந்தையாபிள்ளை நினைவாக, தொழிலதிபர் கனகராசா அன்னம்பாலித்துக் குழந்தைகளுக்கு ஆதரவளித்த பெருமையைக் குறிப்பிட்டுள்ளார்.

### கோண்டாவில் கிழக்கு
### ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர்
### சனசமூக நிலையம்
### குமரன் விளையாட்டுக்கழகம்

நல்லமுறையில் சமூகப்பணி புரியும் இவர்கள் நிரந்தரமாகக் கட்டடம் அமைத்து 26-2-86ஆம் நாளில் திறப்பு விழாச் செய்துள்ளார்கள். இவர்களும் கழகமும் வாழ்க. இவர்தம் பணி வெல்க என்று மில்க்வைற் தொழிலதிபர் வாழ்த்துகிருர்.

★ யோகத்தின் முதற்படி பேச்சை அடக்குதல் ★

## மானங்காக்கும் மரவள்ளி வாழ்க!

தமிழன் கிழங்கு கல்லித் தேனெடுத்து வளம்பாடி நடனமாடியவன். இன்று கிழங்குகளுள் மரவள்ளி மானங் காக்கும் பொருளாதாரப் பயிருமாகும். மரவள்ளிக் கிழங்கை மூலப்பொருளாகக்கொண்டு பலவித உற்பத்திகளை உருட்டிவிடலாம்தானே? சவ்வரிசியாம், வற்றலாம் இன்னும் என்னவோ பலவாம். மரவள்ளி இலையில் குருத்தையும், பழுத்ததையும் விட்டு நடுப்பகுதியில் சில இலைகளை ஒடித்து வறை, பிட்டு செய்து உண்டவர்கள் உவக்கின்றார்கள். நீங்கள் செய்துபாருங்கள், மரவள்ளியை வாழவிடுங்கள். வாழவையுங்கள் வாழுங்கள்.


மில்க்வைற் தயாரிப்புகளில்

உங்களுக்குச்

- ◇ சிறந்தது
- ◇ சிக்கனமானது
- ◇ நுரைவளம் உள்ளது
- ◇ அழுக்கை உடனடியாகப் போக்குவது
- ◇ துண்டுதுண்டுகளாக வெட்டி உங்கள் தேவைக்கு உபயோகிக்கக்கூடியது.




மில்க்வைற் பார் சோப்

குறைக்கப்பட்ட புதிய விலை

முழுபார் 13-00 அரைபார் 6-50 மினிபார் 3-00

2பார் சோப் மேலுறைகள் அனுப்பி 1 யோகாசன ஸ்ரிக்கர் அல்லது திருவள்ளுவர் ஸ்ரிக்கரைப் பெற்றுக்கொள்க.


### விற்பனையும் . . .

(முதலாம் பக்கத் தொடர்)

ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தேனீ வாழ்வு வாழ்கிறன்.

ஈட்டுவதில் ஒருபகுதியை ஈயும்போது உண்டாகும் இன்பம் ஈத்துவக்கும் இன்பம். கொடுத்து இளைத்த தாதாவின் அழகு, போர்முகத்தில் காயப்பட்டு வெற்றிபெற்ற வீரனின் அழகுக்கு ஒப்பாகும் என்று ஔவையார் கூறியுள்ளார். கொடுத்தகை நீளும்தன்மையுள்ளதாக கம்பர் தருகை நீண்டதாகக் கூறியுள்ளார். அந்தக்காலத்தில் கொடுக்கப் பழக்கியவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டிமார். இன்று கொடுக்கப் பழக்குபவர்கள் உலகமளாவிய ரோட்டரிக் கழகத்தாரும், லயன்ஸ் கழகத்தாருமாவர்.

## மரந்தறிக்கவந்த விறகுவெட்டியைத் தடுத்து, மரத்தை வாழ்த்திய புலவர்

"விறகு விற்போயே! விறகுவிற்போயே!
வியனுர் இம்மரம் வெட்டுதல் தவிர்தி.
இளமைமி லெனக்கி தின்நிழல் தந்தது.
ஆதலி னிதனையிவ் வமயம் காப்பன்யான்
என்மு தாதையெம் இல்லினுக் கெதிரே
தன்கையால் வைத்துத் தான்வளர்த் ததுவிது
வைத்த இடத்தே மன்னுக நீள்கைக்
கோடரி கொண்டு குறைத்திட விடுகலேன்
பண்டே பழகிய பழந்தரு இதன்சீர்
பாரினும் கடலினும் பரவிய திதனைநீ
எறிந்து வீழ்த்திட எண்ணலும் ஆமோ?
என்றும் மறக்கொணு தினிய தாருவே!
மன்பழ நேய!நின் மரவுரி மானஎன்
இதயநார் நினைச்சூழ்ந் திறுகப் புல்லுமால்
பழந்தரு வேநின் பாலுறீஇப் பறவைகள்
பாடுக: நின்கிளை ஆடுக என்றும்
நெடும்புயற் கிடையாது நிலைநின்று வாழி!"

(சென்னைப் பல்கலைக்கழகத்து 1948 பங்குனி இன்ரர் மீடியேற் தேர்வில் பொழிப்பெழுதுமாறு கேட்டகேள்வி.)

## கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக்கழகம் செய்த கூரிய சீரிய ஆராய்ச்சி முடிவு

வேப்பம் சருகை விணுக்காதீர். விவசாயிகள் விலை கொடுத்து வாங்குங்கள். நம்பிக்கையான உயர்தர பசளை இது. வேம்பு சொரிகிறது. இது கடவுட்கொடை.

கூட்டி அள்ளி வயலில் இடுங்கள்.. விளைவு பெருகும். வாழ்வு சிறக்கும். வேம்பை வளர்ப்போம். கன்றுகள் என்றும் இலவசமாக நூற்றுக்கணக்காக உங்களுக்குத் தருவோம்.

— மில்க்வைற்

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள் கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-3-86.